இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

ஊடக அறிக்கை
****

இந்தியாவின் 73 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்தான இசை இலங்கையின் கொழும்பில் இரசிகர்களை மயக்கியது

இந்தியாவிலிருந்து வந்துள்ள இசை மேதைகள் பண்டிட் ஷிவ் குமார் ஷர்மா மற்றும் பண்டிட் ராஹூல் ஷர்மா கலந்து சிறப்பித்த “அமைதியின் தந்திகள்” (Strings of Harmony) - சந்தூர் வாத்திய ஜூஹல்பந்தி எனும் ஒரு பெரும் இசை மாலைப் பொழுது ஆகஸ்ட் 15 அன்று கொழும்பிலுள்ள பணடாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இசைப்பிரியர்களை மயக்கியது. இந்தக் கலாச்சார நிகழ்ச்சி இந்தியாவின் 73 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் தொகுத்து வழங்கப்பட்டது.

1500 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்ட இந்தக் கலாச்சார நிகழ்வில் பண்டிட் ஷிவ் குமார் ஷர்மா மற்றும் பண்டிட் ராஹூல் ஷர்மா அவர்களும் தங்களது படைப்பாற்றல் மிக்க இசைத் திறமையினால் இரசிகர்களை மெய்மறக்கப் பண்ணினர். காஷ்மீரின் ஒரு இசைக் குடும்பத்திலிருந்து தோன்றிய சந்தூர் வாத்திய இசை மேதைகள் இருவருடன் ராஹூல் ஷர்மா, பவானி பிரசாத் கதக், யோகேஷ் ரட்னகர் சம்சி ஆகிய பிரபல வாத்தியக் கலைஞர்களும் தம்புரா , தபலா மற்றும் பக்வாஜ் ஆகிய பக்க வாத்தியங்களுடன் இவ்விசை நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காஷ்மீர்ப் பள்ளத்தாக்கிலிருந்து 100 தந்திகள் கொண்ட ஒரு தனித்துவமான நாட்டுப்புற இசைக் கருவியான சந்தூர் அதன் சாஸ்திரிய இசை அந்தஸ்தை பண்டிட் ஷிவ் குமார் ஷர்மாவிற்கு அளித்துள்ளது. பண்டிட் ஷிவ் குமார் ஷர்மா, எனும் இசை மேதை அரை நூற்றாண்டுக்கும் மேலாக தனது தொழில் ரீதியான இசை நிகழ்வுகள் மூலமாக தனது படைப்பாற்றல் திறமையுடன் வாத்திய இசையில் ஒரு புதிய பாணியை உருவாக்கினார் . இந்திய அரசாங்கத்திடமிருந்து இரண்டாவது மிகவுயர்ந்த மக்கள் விருதான, பத்மவிபூஷண் உட்பட, தேசிய மற்றும் சர்வதேச விருதுகளின் ஒரு நீண்ட பட்டியலுடன் அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். சாஸ்திரிய இசைக்கு அப்பால், பண்டிட் ஷர்மா அவர்கள், வெற்றிகரமான பாலிவுட் திரைப்படங்களான சில்சிலா, சந்த்னி, லாம்ஹே, தார் போன்றவற்றுக்கும் இசை அமைத்துள்ளார். அவை உலகம் முழுவதிலுமே எப்போதும் பிரபல்யமான இசையாக உள்ளது.

இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்த வேளையில் வைபவத்திற்கு இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து அவர்கள் தலைமை தாங்கினார். கௌரவ அமைச்சர் ராவூப் ஹக்கீம் , கௌரவ அமைச்சர் ரவி கருணநாயக்க , கௌரவ அமைச்சர் பழனி திகாம்பரம் ,

கௌரவ அமைச்சர் தயா கமகே, கௌரவ இராஜாங்க அமைச்சர் அனோமா கமகே, கௌரவ இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன், கௌரவ ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும் ஏனைய பல பிரமுகர்களும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

“இந்தியாவின் நெசவுகள் மற்றும் தையல்கள்: சேலைக் கலாச்சாரம்” – எனும் தலைப்பிலான ஒரு கண்காட்சி இந்தியாவின் வெவ்வேறு மாநிலங்களிலிருந்தான துணிகள் மற்றும் நெசவுகள் மூலமாக பன்மைத்துவத்தில் ஒரு ஒருமைப்பாட்டை , பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காட்சிப்படுத்தியதுடன் அது பார்வையாளர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

இலங்கையில் இந்தியாவின் 73 ஆவது சுதந்திர தின நாள் வைபவ நிகழ்வுகள் , இந்திய உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான, இந்தியா இல்லத்தில், காலையில் நடைபெற்ற இந்தியத் தேசியக் கொடியேற்றுதல் நிகழ்வுடன் ஆரம்பமாகியது. நிகழ்வு பொதுமக்களுக்குமாகத் திறந்திருந்ததுடன் இந்தியப் பிரஜைகள் பெருமளவிலான எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து இந்திய ஜனாதிபதியின் நாட்டுக்கான உரையினை வாசித்ததுடன் கூட்டத்தில் உரையுமாற்றினார். தனது உரையில், அனைத்துப் பயங்கரவாத சக்திகளுக்கும் எதிராக இலங்கையுடனான இந்தியாவினது ஒருமைப்பாட்டை அவர் வலியுறுத்தினார். உரையினைத் தொடர்ந்து பல்வேறு இந்தியப் பிரதேசங்களிலிருந்தும் நாட்டுப்புற மற்றும் சாஸ்திரிய நிகழ்வுகளை பிரதிபலிக்கும் ஒரு சுருக்கமான கலாச்சார நிகழ்ச்சியும் நடைபெற்றது.

******